# பணியின்போது, இந்தப் பாதுகாப்பு வழிகாட்டுதல்களில் கவனம் செலுத்தவும்:

## 01



பணியாளர்களின் பாதுகாப்பு குறித்து உங்களின் ஒப்பந்ததாரர்களுடன் கலந்துரையாடவும்; பாதுகாப்பு வழிகாட்டுதல்கள் குறித்து அவர்கள் அனைவரிடமும் தவறாமல் தெரிவிக்கவும்.

## 02



உங்களின் பணி தளத்தில் பணியாற்ற ஆரோக்கியமானவர்களை மட்டும் அனுமதிக்கவும் மற்றும் வெளியாட்கள் யாரையும் உங்களின் பணி தளத்திற்குள் நுழைய விடாதீர்கள்.

## 03



தினமும் பணி தளத்தில் இருப்பவர்களின் உடல் வெப்பநிலையைச் சோதிப்பது அவசியமாகும். தளத்தை அடைந்தவுடன், கைகளில் கிருமிநாசினியைப் பயன்படுத்திய பிறகுதான் பணியைத் தொடங்க வேண்டும் மற்றும் ஒவ்வொரு இரண்டு மணிநேரத்திற்குப் பிறகும் கைகளைக் கழுவ வேண்டும்.

## 04



பணி தளத்தில் உள்ள அனைவரும் தலைக் கவசம், கையுறைகள் மற்றும் முககவசத்தை அணிய வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும்.

## 05




பணி தளத்தில் சமூக இடைவெளி விதிகளைப் பின்பற்றுவதை வலியுறுத்தவும் மற்றும் கை குலுக்கக்கூடாது. எப்போதும் 6 அடி இடைவெளியை விட்டு நிற்கவும்.

## 06



உணவு உண்பதற்கென்று ஒரு குறிப்பிட்ட இடத்தை நிர்ணயித்துக்கொள்ளவும் மற்றும் உணவு உண்ணும்போது சமூக இடைவெளியைப் பின்பற்றுவது அவசியமாகும். பணி தளத்தில் சுத்தமான குடிநீருக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

## 07



பணி தளத்தில் குட்கா, புகையிலை மற்றும் பான் போன்றவற்றை மென்று துப்புவதைத் தடை செய்வதன் மூலம், அசுத்தமும், நோய்களும் பரவாது.

## 08



சிலருக்கு இருமல், சளி, காய்ச்சல் போன்ற அறிகுறிகள் இருந்தால், அவர்களைப் பணியாற்ற அனுமதிக்கக் கூடாது, மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்ய வேண்டும் என்று அவர்களிடம் சொல்லுங்கள்.

## 09




உங்களின் பணி தளத்தில் மருத்துவமனை மற்றும் அவசரச் சேவை எண்களை வழங்க வேண்டும்.

அல்ட்ராடெக் சிமெண்ட்
இன்ஜினியரின் விருப்பம்
இந்தியாவின் No. 1 சிமெண்ட்

வீடு கட்டுவது தொடர்பான மேலும் விவரங்களுக்கு, இங்கு க்ளிக் செய்யவும்

'அல்ட்ராடெக், இந்தியாவின் No. 1 சிமெண்ட்' - மேலும் இதை பற்றிய விபரங்களுக்கு பார்வையிடவும் ultratechcement.com